## பாடம் 1 - தமிழ்மொழி வாழ்த்து

**1)** "சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத் / துலங்குக வையகமே!" என்று பாடியவர் யார்?

A) பாரதியார்
B) பாரதிதாசன்
C) சுத்தானந்த பாரதியார்
D) சுப்புரத்தின தாசன்

வாழ்க நிரந்தரம்! வாழ்க தமிழ்மொழி! / வாழிய வாழியவே!
வான மளந்தது அனைத்தும் அளந்திடு / வண்மொழி வாழியவே!
ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி / இசைகொண்டு வாழியவே!
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி! / என்றென்றும் வாழியவே!
தொல்லை வினைதரு தொல்லை அகன்று / சுடர்க தமிழ்நாடே!
வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி / வாழ்க தமிழ்மொழியே!
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து / வளர்மொழி வாழியவே!

- பாரதியார்

**2)** சூழ்கலி என்ற சொல்லில் 'கலி' என்பதன் பொருள் என்ன?

A) காலம் முழுமையும்
B) வளமிக்க மொழி
C) அறியாமை இருள்
D) துன்பம்

**3)** பின்வருவனவற்றுள் வண்மொழி என்பதன் பொருள் என்ன?

A) வன்மையான மொழி
B) வண்ணமயமான மொழி
C) வல்லாதிக்க மொழி
D) வளமிக்க மொழி

**4)** பின்வருவனவற்றுள் இசை என்ற சொல்லின் பொருள் என்ன?

A) காலம்
B) புகழ்
C) செல்வம்
D) துன்பம்

**5)** தமிழ்மொழி மேன்மையுற்று உலகம் முழுவதும் சிறப்படைந்தால் எது நீங்கும் என்று பாரதியார் கூறுகிறார்?

A) வறுமை
B) நாடுகளிடையேயான எல்லை பிரச்சனை
C) கயமை
D) அறியாமை இருள்

**6)** பாரதியார்

A) கவிஞர், எழுத்தாளர் & இதழாளர்
B) சமூகசீர்திருத்தவாதி
C) சிந்தனையாளர் & விடுதலைப்போராட்ட வீரர்
D) மேற்கண்ட அனைத்தும்

**7)** பின்வருவனவற்றுள் பாரதியோடு தொடர்பில்லாத இதழ் யாது?

A) இந்தியா
B) விஜயா
C) குயில்
D) சக்கரவர்த்தினி

**8)** பாரதியாரின் உரைநடை நூல்கள் எவை?

A) கண்ணன் பாட்டு, விநாயகர் நான்மணிமாலை
B) குயில் பாட்டு, பாப்பா பாட்டு
C) பாஞ்சாலி சபதம், புதிய ஆத்திச்சூடி
D) சந்திரிகையின் கதை, தராசு

**9)** சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனி, புதிய அறம் பாட வந்த அறிஞன், மறம் பாட வந்த மறவன் என்றெல்லாம் பாரதியாரை புகந்தவர் யார்?

A) ரா.பி.சேது
B) சுரதா
C) பாரதிதாசன்
D) நாமக்கல் கவிஞர்

**1)A 2)C 3)D 4)B 5)D 6)D 7)C 8)D 9)C**

ETW ACADEMY

**10)** செந்தமிழே! செங்கரும்பே! செந்தமிழர் சீர்காக்கும் / நந்தா விளக்கனைய நாயகியே! - முந்தை மொழிக்கெல்லாம் மூத்தவளே! என்று தமிழை போற்றும் "செந்தமிழ் அந்தாதியை" எழுதியவர் யார்?

A) செ.பிருந்தா B) து.அரங்கன் C) அ.வெண்ணிலா D) அகர முதல்வன்

- உயிரும் நீ; மெய்யும்நீ; ஓங்கும் அறமாம் / பயிரும்நீ; இன்பம்நீ; அன்புத் தருவும்நீ; வீரம்நீ; காதல்நீ; ஈசன் அடுக்குநல் ஆரம்நீ; யாவும்நீ யே! - து.அரங்கன்

**புத்தகப் பின்பக்க வினாக்கள்**

**11)** மக்கள் வாழும் நிலப்ப குதியைக் குறிக்கும் சொல் _____.

A) வைப்பு B) கடல் C) பரவை D) ஆழி

**12)** 'என்றென்றும்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______.

A) என் + றென்றும் B) என்று + என்றும் C) என்றும் + என்றும் D) என் + என்றும்

**13)** 'வானமளந்தது' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது _______.

A) வான + மளந்தது B) வான் + அளந்தது
C) வானம் + அளந்தது D) வான் + மளந்தது

**14)** அறிந்தது + அனைத்தும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

A) அறிந்ததுஅனைத்தும் B) அறிந்தனைத்தும்
C) அறிந்ததனைத்தும் D) அறிந்துனைத்தும்

**15)** வானம் + அறிந்த என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் _____.

A) வானம்அறிந்து B) வான்அறிந்த C) வானமறிந்த D) வான்மறிந்த

**பாடம் 2 - தமிழ்மொழி மரபு**

**16)** "நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும் / கலந்த மயக்கம் உலகம் ஆதலின் / இருதிணை ஐம்பால் இயல்நெறி வழாஅமைத் / திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்" என்ற அடிகள் பயின்று வரும் நூல் எது?

A) யாப்பெருங்கலம் B) நன்னூல்
C) தண்டியலங்காரம் D) தொல்காப்பியம்

- மரபுநிலை திரிதல் செய்யுட்கு இல்லை / மரபுவழிப் பட்ட சொல்லின் ஆன - தொல்காப்பியம்
- மரபு நிலை திரியின் பிறிது பிறிதாகும் - தொல்காப்பியம்

**17)** சொல்லயும் பொருளையும் பொருத்துக:

1. விசும்பு - அ) மாறுபடுதல்
2. மரபு - ஆ) வானம்
3. மயக்கம் - இ) வழக்கம்
4. திரிதல் - ஈ) கலவை

| | |
|---|---|
| A) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4- அ | B) 1-இ, 2-ஈ, 3-அ, 4- ஆ |
| C) 1-ஈ, 2-இ, 3-ஆ, 4- அ | D) 1-இ, 2-அ, 3-ஈ, 4- ஆ |

**18)** இவ்வுலகில் தோன்றிய பொருள்கள் அனைத்தும் ஐம்பூதங்களின் சேர்க்கையால் உருவானவை ஆகும் என்று கூறும் முதல் தமிழ்நூல் எது?

A) தொல்காப்பியம் B) கார்நாற்பது C) யாப்பெருங்கலகாரியை D) சிலப்பதிகாரம்

**10)B 11)A 12)B 13)C 14)C 15)C 16)D 17)A 18)A**

ETW ACADEMY

**19)** தமிழில் நமக்குக் கிடைத்துள்ள மிகப் பழமையான இலக்கண நூல்?

A) அகத்தியம் B) நம்பியகப்பொருள் C) நன்னூல் D) தொல்காப்பியம்

**20)** தொல்காப்பியத்தை இயற்றியவர் யார்?

A) அகத்தியர் B) நாற்கவிராச நம்பி C) பவணந்தி முனிவர் D) தொல்காப்பியர்

**21)** தொல்காப்பியத்தில் உள்ள அதிகாரங்கள் எத்தனை?

A) ஒன்பது B) மூன்று C) ஐந்து D) நான்கு

**22)** பின்வரும் எது தொல்காப்பியத்தில் உள்ள அதிகாரம் அல்ல?

A) எழுத்து B) சொல் C) பொருள் D) அறம்

**23)** தொல்காப்பியத்தின் ஒவ்வொரு அதிகாரமும் எத்தனை இயல்களைக் கொண்டது?

A) பன்னிரண்டு B) பத்து C) ஒன்பது D) எட்டு

**24)** தொல்காப்பியத்தில் மரபியல் என்னும் இயல் எந்த அதிகாரத்தில் உள்ளது?

A) யாப்பு B) பொருள் C) சொல் D) எழுத்து

**25)** இளமைப்பெயர்களைப் பொருத்துக.

1) புலி - அ) கன்று
2) சிங்கம் - ஆ) பறழ்
3) யானை - இ) குருளை
4) பசு - ஈ) குட்டி
5) ஆடு - உ) கன்று

A) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-உ, 5-அ
B) 1-ஆ, 2-இ, 3-அ, 4-உ, 5-ஈ
C) 1-இ, 2-ஈ, 3-ஆ, 4-உ, 5-அ
D) 1-இ, 2-ஆ, 3-ஈ, 4-உ, 5-அ

**26)** ஒலிமரபுகளைப் பொருத்துக.

1. புலி - அ) பிளிரும்
2. சிங்கம் - ஆ) உறுமும்
3. யானை - இ) முழங்கும்
4. பசு - ஈ) கத்தும்
5. ஆடு - உ) கதறும்

A) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-உ, 5-அ B) 1-ஆ, 2-இ, 3-அ, 4-உ, 5-ஈ
C) 1-இ, 2-ஈ, 3-ஆ, 4-உ, 5-அ D) 1-இ, 2-ஆ, 3-ஈ, 4-உ, 5-அ

**27)** பறவைகள் ________ பறந்து செல்கின்றன.

A) நிலத்தில் B) விசும்பில் C) மரத்தில் D) நீரில்

**28)** இயற்கையைப் போற்றுதல் தமிழர் ________.

A) மரபு B) பொழுது C) வரவு D) தகவு

**29)** 'இருதிணை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

A) இரண்டு + திணை B) இரு + திணை C) இருவர் + திணை D) இருந்து + திணை

**30)** 'ஐம்பால்' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ________.

A) ஐம் + பால் B) ஐந்து + பால் C) ஐம்பது + பால் D) ஐ + பால்

**19)D 20)D 21)B 22)D 23)C 24)B 25)B 26)B 27)B 28)A 29)A 30)B**

ETW ACADEMY

## பாடம் 3 - தமிழ் வரிவடிவ வளர்ச்சி

**31)** மனிதன் தோன்றிய காலத்தில் தனது தேவைகளையும் கருத்துகளையும் மற்றவர்களுக்குத் தெரிவிக்கப் பயன்படுத்தியவைகளில் சேராதது எது?

A) சைகை B) ஒலிகள் C) குறியீடுகள் D) பேச்சுமொழி

**32)** சொற்கள் மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டதால் செம்மைப்படுத்தப்பட்டு காலப்போக்கில் உருவானது எது?

A) பேச்சுமொழி B) எழுத்துமொழி
C) சைகைமொழி D) குறியீட்டுமொழி

**33)** எழுத்து வடிவத்தின் தொடக்கநிலை யாது?

A) எழுத்துக்கள் B) குறியீடுகள் C) கோடுகள் D) புள்ளிகள்

**34)** தொடக்ககாலத்தில் எழுத்து என்பது ஒலியையோ வடிவத்தையோ குறிக்காமல் பொருளின் ஓவிய வடிவமாகவே இருந்தது. இவ்வரிவடிவத்தை ................................ என்பர்.

A) பிராமி எழுத்து B) வட்டெழுத்து C) ஓவிய எழுத்து D) சிற்ப எழுத்து

**35)** ஓர் ஒலிக்கு ஓர் எழுத்து என உருவான நிலையை ................. என்பர்.

A) தனி எழுத்து நிலை B) ஓவிய எழுத்து நிலை
C) மூல எழுத்து நிலை D) ஒலி எழுத்து நிலை

**36)** ........................ தோன்றிய பிறகே தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற்றுள்ளன.

A) அச்சுக்கலை B) வரைகலை
C) ஓவியக்கலை D) மேற்கண்ட அனைத்தும்

**37)** கல்வெட்டுகளில் காணப்படும் வடமொழி எழுத்து எது?

A) ஜ B) ஹ C) ஸ D) ஷ

**38)** கல்வெட்டுகளில் மெய்யைக் குறிக்க

A) புள்ளி பயன்படுத்தப்பட்டது B) புள்ளி பயன்படுத்தப்படவில்லை
C) சிறிய இடைவெளி பயன்படுத்தப்பட்டது D) சிறிய கோடு பயன்படுத்தப்பட்டது

- கல்வெட்டுகளில் எகர, ஒகரக் குறில் நெடில் வேறுபாடில்லை

**39)** தமிழ் எழுத்துகளின் பழைய வரிவடிவங்களைக் கோவிலுள்ள ____ மற்றும் ______ ஆகியவற்றில் காணமுடிகிறது.

A) கோபுரங்கள் & தூண்கள் B) தூண்கள் & மாடங்கள்
C) செப்பேடுகள் & சுவர்கள் D) சிலைகள் & கோபுரங்கள்

**40)** கல்வெட்டுகள், செப்பேடுகள் ஆகியவற்றில் காணப்படும் வரிவடிவங்களை .................. & ................ என இரு வகையாகப் பிரிக்கலாம்.

A) சிற்ப எழுத்து, ஓவிய எழுத்து B) பிராமி எழுத்து, கட்டக எழுத்து
C) கிரந்த எழுத்து, வடமொழி எழுத்து D) வட்டெழுத்து, தமிழெழுத்து

- வளைந்த கோடுகளால் அமைந்த மிகப் பழைய தமிழ் எழுத்து - வட்டெழுத்து
- இக்காலத்தில் எழுதப்படும் தமிழ் எழுத்துகளின் பழைய வரி வடிவம்: தமிழெழுத்து

**31)D 32)A 33)B 34)C 35)D 36)A 37)C 38)B 39)C 40)D**

ETW ACADEMY

**41)** சேர மண்டலம், பாண்டிய மண்டலம் ஆகிய பகுதிகளில் எட்டாம் நூற்றாண்டு முதல் பதினொன்றாம் நூற்றாண்டு வரை கிடைக்கு சாசனங்களில் இடம்பெற்றுள்ள எழுத்துகள் எவை?

A) தமிழெழுத்துகள் B) பிராமி எழுத்துகள்
C) வட்டெழுத்துகள் D) A & C

**42)** எந்த நூற்றாண்டுக்குப் பிறகு கிடைக்கும் கல்வெட்டுகளில் தமிழெழுத்துகள் காணப்படுகின்றன?

A) 11ம் நூற்றாண்டிற்குப் பிறகு B) 9ம் நூற்றாண்டிற்குப் பிறகு
C) 12ம் நூற்றாண்டிற்குப் பிறகு D) 10ம் நூற்றாண்டிற்குப் பிறகு

**43)** 11ம் நூற்றாண்டில் ஆட்சி செய்த சோழமன்னன் யார்?

A) விஜயாலயன் B) கரிகாலன் C) இராஜராஜன் D) குலோத்துங்கன்

**44)** கடைச்சங்கக் காலத்தில் தமிழகத்தில் எழுதப்பட்ட எழுத்துகள் ........................ என்று அழைக்கப்பட்டன.

A) கண்ணெழுத்துகள் B) சுட்டெழுத்துகள்
C) வட்டெழுத்துகள் D) தமிழ் பிராமி எழுத்துக்கள்

**45)** "கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல்பொதி" என்னும் தொடர் இடம்பெற்ற காப்பியம் எது?

A) வளையாபதி B) குண்டலகேசி
C) சிலப்பதிகாரம் D) மணிமேகலை

**46)** எழுத்துகளில் மாற்றங்கள் ஏற்பட காரணங்களாக அமைபவை?.

A) பாடல் பொருள் & பாடல் வடிவம்
B) பாடல் வடிவம் & எழுத்தாணியின் அமைப்பு
C) எழுதப்படும் பொருளின் தன்மை & அழகுணர்ச்சி
D) எழுதுபவரின் மனநிலை & எழுதப்படும் பொருளின் தன்மை

- பாறைகளில் செதுக்கும்போது வளைகோடுகளைப் பயன்படுத்த முடியாது என்பதால் நேர்க்கோடுகள் பயன்படுத்தப்பட்டன.
- ஓலைகளில் நேர்க்கோடுகளையும் புள்ளிகளையும் எழுதுவது கடினம் என்பதால் வளைகோடுகளை அதிகமாகப் பயன்படுத்தினர்.
- சில எழுத்துகளை அழகுபடுத்துவதற்காக அவற்றின் மேற்பகுதியில் குறுக்குக்கோடு இடப்பட்டது

**47)** தமிழ் மொழியை எழுத இருவகை எழுத்துக்கள் வழக்கிலிருந்ததை நாம் எதன் மூலம் அறிகிறோம்?

A) ஆதிச்சநல்லூர் கல்வெட்டு B) சின்னமனூர்ச் செப்பேடு
C) குடுமியான்மலை கல்வெட்டு D) அரச்சலூர் கல்வெட்டு

- இக்கல்வெட்டில் தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளது

**48)** எகர ஒகர குறில் எழுத்துகளைக் குறிக்க எழுத்துகளின் மேல் புள்ளி வைக்கும் வழக்கம் யாருடைய காலம் முதல் இருந்துவருகிறது?

A) தொல்காப்பியர் B) அகத்தியர் C) நக்கீரர் D) தண்டி

**49)** முன் காலத்தில் எகர ஒகர குறில் எழுத்துகளைக் குறிக்க எழுத்துகளின் மேல் புள்ளிவைத்தால் அது

A) குறில் எழுத்து B) நெடில் எழுத்து C) குறில் / நெடில் D) குறில் & நெடில்

**41)C 42)A 43)C 44)A 45)C 46)C 47)D 48)A 49)A**

ETW ACADEMY

- புள்ளி வைக்கவில்லையென்றால் அது - நெடில் எழுத்து

**50)** அகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்துப் பக்கப்புள்ளி இடப்பட்டால் அவை எவ்வாறு கருதப்பட்டன.

A) குறில் B) நெடில் C) குறில் / நெடில் D) குறில் & நெடில்

- க. = கா

**51)** ஐகார எழுத்துகளைக் குறிப்பிட எழுத்துகளின்முன் எத்தனைப் புள்ளிகள் இட்டனர்?

A) ஒற்றைப்புள்ளி B) முப்புள்ளி C) இரட்டைப்புள்ளி D) நாற்புள்ளி

- ..க = கை

**52)** எகர வரிசை உயிர்மெய்க் குறில் எழுத்துகளை அடுத்து இரு புள்ளிகள் இடப்பட்டால் அவை ............................ எழுத்துகளாகக் கருதப்பட்ட ன.

A) ஏகார வரிசை B) ஒகரவரிசை C) மகரவரிசை D) ஔகார வரிசை

- கெ.. = கௌ

**53)** மகர எழுத்தைக் குறிப்பிட, எந்த எழுத்தின் உள்ளே புள்ளி இட்டனர்?

A) ஈ B) எ C) ஒ D) ப

- குற்றியலுகர, குற்றியலிகர எழுத்துகளைக் குறிக்க அவற்றின் மேலேயும் புள்ளி இட்டனர்.

**54)** நெடிலைக் குறிக்க ஒற்றைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் ......................... பயன்படுத்தப்படுகிறது.

A) துணைக்கால் B) இணைக்கொம்பு C) ஒற்றைக்கொம்பு D) கொம்புக்கால்

**55)** ஐகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்கு முன் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் ................ பயன்படுத்தப்படுகிறது.

A) துணைக்கால் B) இணைக்கொம்பு C) ஒற்றைக்கொம்பு D) இரட்டைப்புள்ளி

**56)** ஔகார உயிர்மெய்யைக் குறிக்க எழுத்துக்குப்பின் இருந்த இரட்டைப்புள்ளிக்குப் பதிலாக இக்காலத்தில் .......................... பயன்படுத்தப்படுகிறது.

A) இரட்டைப்புள்ளி B) இணைக்கொம்பு C) ஒற்றைக்கொம்பு D) கொம்புக்கால்

**57)** பின்வருவனவற்றுள் பொருந்தாத தொடரைக் கண்டறிக.

A) ஓலைச் சுவடிகளிலும் கல்வெட்டுகளிலும் புள்ளிபெறும் எழுத்துகளை எழுதும்போது அவை சிதைந்துவிடும் என்பதால் புள்ளி இடாமல் எழுதினர்.

B) ஓலைச்சுவடிகள் படிப்பதற்கு எளிமையாக இருந்தன.

C) புள்ளி இடப்பட்டு எழுதப்படும் இடங்களில் புள்ளிகள் தெளிவாகத் தெரியாத நிலையில் அவற்றின் இடம் நோக்கி மெய்யா உயிர்மெய்யா, குறிலா நெடிலா என உணர வேண்டிய நிலை இருந்தது.

D) ஓலைச் சுவடிகளில் நிறுத்தற் குறிகளும் பத்தி பிரித்தலும் கிடையாது.

**58)** தமிழ் எழுத்துகளில் மிகப்பெரும் சீர்திருத்தத்தைச் செய்தவர் .................................

A) தத்துவபோதகர் B) ஜி.யு.போப்
C) வீரமாமுனிவர் D) எல்லீஸ்

**50)B 51)C 52)D 53)D 54)A 55)B 56)D 57)B 58)C**

**59)** வீரமாமுனிவர் செய்த எழுத்து சீர்திருத்தத்தில் சேராதது எது?

A) எகர ஒகர வரிசை எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களை அவர் களைந்தார்.

B) எ என்னும் எழுத்திற்குக் கீழ்க்கோடிட்டு ஏ என்னும் எழுத்தை நெடிலாகவும் ஒ என்னும் எழுத்திற்குச் சுழி இட்டு ஓ என்னும் எழுத்தாகவும் உருவாக்கினார்.

C) ஏகார ஓகார வரிசை உயிர்மெய் நெடில் எழுத்துகளைக் குறிக்க இரட்டைக் கொம்பு, இரட்டைக் கொம்புடன் கால் சேர்த்து புதிய வரிவடிவத்தை அறிமுகப்படுத்தினார்.

D) மகர எழுத்து உருவாவதற்காக பகரத்தின் உள்ளே புள்ளி இட்டவர்.

**வீரமாமுனிவரின் எழுத்துச் சீர்திருத்தம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எ் | எ | ஒ் | ஒ | கெ் | கெ | கொ் | கொ |
| எ | ஏ | ஒ | ஓ | கெ | கே | கொ | கோ |

**60)** அச்சு கோர்ப்பதில் ஏற்படும் சிரமத்தைத் தவிர்க்க தமிழ் எழுத்துகளில் சில சீர்திருத்தங்களைச் செய்தவர்?

A) வீரமாமுனிவர்
B) பாரதியார்
C) பெரியார்
D) இராபர்ட் தி நோபிலி

**பெரியார் எழுத்துச் சீர்திருத்தம்**

| வ.எண் | பழைய வடிவம் | சீர்திருத்த வடிவம் | சான்று |
|---|---|---|---|
| 1. | ணா | ணா | அண்ணா - அண்ணா |
| 2. | ணை | ணை | அணை - அணை |
| 3. | ணொ | ணொ | மண்ணொடு - மண்ணொடு |
| 4. | ணோ | ணோ | கண்ணோடு - கண்ணோடு |
| 5. | லை | லை | தலை - தலை |
| 6. | ளை | ளை | களை - களை |
| 7. | றா | றா | சிறார் - சிறார் |
| 8. | றொ | றொ | மற்றொரு - மற்றொரு |
| 9. | றோ | றோ | காற்றோடு - காற்றோடு |
| 10. | னா | னா | மன்னா - மன்னா |
| 11. | னை | னை | வினை - வினை |
| 12. | னொ | னொ | என்னொடு - என்னொடு |
| 13. | னோ | னோ | என்னோடு - என்னோடு |

## புத்தகப் பின்பக்க வினாக்கள்

**61)** தமிழ் எழுத்துகள் இப்போதுள்ள நிலையான வடிவத்தைப் பெற ____ காரணமாக அமைந்தது.

A) ஓவியக்கலை B) இசைக்கலை C) அச்சுக்கலை D) நுண்கலை

**62)** வளைந்த கோடுகளால் அமைந்த மிகப்பழைய தமிழ் எழுத்து _____ என்பர்.

A) கோட்டெழுத்து B) வட்டெழுத்து C) சித்திர எழுத்து D) ஓவிய எழுத்து

**63)** தமிழ் எழுத்துச் சீர்திருத்தப் பணியில் ஈடுபட்டவர் ____.

A) பாரதிதாசன்
B) தந்தை பெரியார்
C) வ.உ. சிதம்பரனார்
D) பெருஞ்சித்திரனார்

**64)** கடைச்சங்க காலத்தில் எழுதப்பட்ட தமிழ் எழுத்துகள் _ _ _ _ _ என அழைக்கப்பட்டன.

A) கண்ணெழுத்துகள்
B) சுட்டெழுத்துகள்
C) வட்டெழுத்துகள்
D) தமிழெழுத்துகள்

**59)D 60)C 61)C 62)B 63)B 64)A**

**65)** எழுத்துகளில் புள்ளிகளால் ஏற்படும் குழப்பங்களைக் களைந்தவர் ______.

A) தந்தை பெரியார் B) வீரமாமுனிவர்

C) வ.உ. சிதம்பரனார் D) பெருஞ்சித்திரனார்

## பாடம் 4 - சொற்பூங்கா

**66)** தமிழில் சொல் என்பதற்கு ................ என்பது ஒரு பொருள்.

A) கம்பு B) நெல் C) சோளம் D) கரும்பு

**67)** "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்றவர் யார்?

A) அகத்தியர் B) நக்கீரர் C) தொல்காப்பியர் D) தண்டி

**68)** மொழி என்பதற்கு ................ என்பது ஒரு பொருள்.

A) சொல் B) பொருள் C) எழுத்து D) அணி

**69)** சொல் என்பதோடு தொடர்பில்லாத தொடரைக் கண்டறிக.

A) சொன்றி B) சோறு C) நெல் D) அரிசி

**70)** நெட்டெழுத்து ஏழே ஓரெழுத்து ஒருமொழி என்பார் யார்?

A) புத்தமித்திரனார் B) பவணந்தி முனிவர்

C) வச்சிரணந்தி D) தொல்காப்பியர்

**71)** ...................... ஐந்தும் மொழிநிறைபு இலவே என்பார் தொல்காப்பியர்.

A) வல்லெழுத்து B) நெட்டெழுத்து C) குற்றெழுத்து D) மெல்லெழுத்து

**72)** ஓரெழுத்து ஒருமொழி மொத்தம் எத்தனை உள்ளன.

A) 42 B) 40 C) 32 D) 247

**தெரிந்து தெளிவோம்** — **ஓரெழுத்து ஒருமொழிகள்**

| | | | |
|---|---|---|---|
| உயிர் எழுத்து | – ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ | ககர வரிசை | – கா, கூ, கை, கோ |
| மகர வரிசை | – மா, மீ, மூ, மே, மை, மோ | சகர வரிசை | – சா, சீ, சே, சோ |
| தகர வரிசை | – தா தீ, தூ, தே, தை | வகர வரிசை | – வா, வீ, வை, வெள |
| பகர வரிசை | – பா, பூ, பே, பை, போ | யகர வரிசை | – யா |
| நகர வரிசை | – நா, நீ, நே, நை, நோ | குறில் எழுத்து | – நொ, து |

**73)** தொல்காப்பியருக்கு நெடிதுநாள் பின்னே தோன்றிய .................. நொ, து என்னும் உயிர்மெய் எழுத்துகளும் பொருளுடைய ஓர் எழுத்து மொழி என்பார்.

A) மயிலை நாதர் B) நன்னூலார்

C) ஐயனாரிதனார் D) குணவீர பண்டிதர்

**74)** ஆமா என்பதன் பொருள்?

A) பசு B) காளை C) காட்டுப்பசு D) எருமை

**75)** .................. என்னும் பொதுப்பெயர் ஓயாது ஒலி செய்யும் ஒலிக்குறிப்பைக் காட்டி நிற்கிறது.

A) அருவி B) கடல் C) ஈ D) பறவை

**76)** ஏவுகின்றை அம்பைப்போல் கூர் முனையுள்ள முள்ளம்பன்றியின் பழம்பெயர் ......................

A) எயினர் B) எயினியர் C) எய்ப்பன்றி D) எய்ப்பசு

**65)B 66)B 67)C 68)A 69)D 70)D 71)C 72)A 73)B 74)C 75)C 76)C**

ETW ACADEMY

77) இவர் யார்?

1. 'செந்தமிழ் அந்தணர்' என்று அழைக்கப்படுபவர்
2. இலக்கண வரலாறு என்னும் நூலை இயற்றியவர்
3. தேவநேயம் என்னும் நூலைத் தொகுத்தவர்

A) பாவாணர் B) இரா. இளங்குமனார்
C) பெருஞ்சித்திரனார் D) பரிதிமாற்கலைஞர்

78) இரா.இளங்குமனார் இயற்றாத நூல் யாது?

A) தமிழின் தனிப்பெருஞ் சிறப்புகள் B) தமிழிசை இயக்கம்
C) தனித்தமிழ் இயக்கம் D) தமிழ் இன்பம்

79) இளங்குமரனார் திருச்சிக்கு அருகில் ................... என்னும் ஊரில் திருவள்ளுவர் தவச்சாலையும், பாவாணர் நூலகமும் அமைத்துள்ளார்.

A) அல்லூர் B) கல்லூர் C) நல்லூர் D) செல்லூர்

பாடம் 5 - எழுத்துகளின் பிறப்பு

80) உயிரின் முயற்சியால் உடலின் உள்ளிருந்து எழும் காற்றானது மார்பு, தலை, கழுத்து, மூக்கு ஆகிய நான்கு இடங்களுள் ஒன்றில் பொருந்தி, இதழ், நாக்கு, பல், மேல்வாய் ஆகிய உறுப்புகளின் முயற்சியினால் வேறுவேறு ஒலிகளாகத் தோன்றுகின்றன. இதனையே .................................. என்பர்.

A) எழுத்துகளின் பிறப்பு B) இடப்பிறப்பு
C) முயற்சிப் பிறப்பு D) சொற்பிறப்பு

81) எழுத்துகளின் பிறப்பு எத்தனை வகைப்படும்?

A) நான்கு B) மூன்று C) இரண்டு D) ஐந்து

82) கழுத்தை இடமாகக் கொண்டு பிறப்பவை?

A) மெய் எழுத்துகள் B) உயிர் எழுத்துகள் C) வல்லினம் D) இடையினம்

83) மார்பை இடமாகக் கொண்டு பிறக்கும் எழுத்துகள் எவை?

A) உயிர் எழுத்துகள் B) ஆய்த எழுத்து
C) மெல்லின மெய்கள் D) வல்லின மெய்கள்

84) மெல்லின மெய் எழுத்துகள் ஆறும் ........................... இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

A) மூக்கை B) பல் C) மேல்வாய் D) இதழ்

85) ................................ எழுத்துகள் ஆறும் கழுத்தை இடமாகக் கொண்டு பிறக்கின்றன.

A) மெய் எழுத்துகள் B) உயிர் எழுத்துகள்
C) வல்லின மெய் D) இடையின மெய்

86) தலையை இடமாகக் கொண்டு பிறக்கும் எழுத்து எது?

A) உயிர் எழுத்துகள் B) ஆய்த எழுத்து C) மெல்லின மெய்கள் D) வல்லின மெய்கள்

87) ......................... ஆகிய இரண்டும் வாய் திறத்தலாகிய முயற்சியால் பிறக்கின்றன.

A) அ, ஆ B) இ, ஈ C) உ, ஊ D) எ, ஏ

77)B 78)D 79)A 80)A 81)C 82)B 83)D 84)A 85)D 86)B 87)A

**88)** வாய்திறக்கும் முயற்சியுடன் நாக்கின் அடி ஓரமானது மேல்வாய்ப் பல்லைப் பொருந்தும் முயற்சியால் பிறக்கின்ற சொற்கள் எவை?

A) க, ச, ட, த, ப, ற
B) ய, ர, ல, வ, ழ, ள
C) இ, ஈ, எ, ஏ, ஐ
D) உ, ஊ, ஒ, ஓ, ஔ

**89)** உ, ஊ, ஒ, ஓ, ஔ ஆகிய ஐந்தும் வாய் திறக்கும் முயற்சியுடன் .................... குவிப்பதால் பிறக்கின்றன

A) கீழ்வாய் அண்ணம் B) மூக்கு C) நாக்கு D) இதழ்கள்

- க், ங் - நாவின் முதற்பகுதி, அண்ணத்தின் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
- ச், ஞ் - நாவின் இடைப்பகுதி, நடு அண்ணத்தின் இடைப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
- ட், ண் - நாவின் நுனி, அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கின்றன.
- த், ந் - மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் நுனி பொருந்துவதால் பிறக்கின்றன.
- ப், ம் - மேல் இதழும் கீழ் இதழும் பொருந்துவதால் பிறக்கின்றன.
- ய் - நாக்கின் அடிப்பகுதி, மேல் வாயின் அடிப்பகுதியைப் பொருந்துவதால் பிறக்கிறது.
- ர், ழ் - ஆகிய இருமெய்களும் மேல்வாயை நாக்கின் நுனி வருடுவதால் பிறக்கின்றன.
- ல் – இது மேல்வாய்ப் பல்லின் அடியை நாக்கின் ஓரங்கள் தடித்து நெருங்குவதால் பிறக்கிறது.
- ள் – இது மேல்வாயை நாக்கின் ஓரங்கள் தடித்துத் தடவுதலால் பிறக்கிறது.
- வ் – இது மேல்வாய்ப்பல்லைக் கீழ் உதடு பொருந்துவதால் பிறக்கிறது.
- ற், ன் - ஆகிய இருமெய்களும் மேல்வாயை நாக்கின் நுனி மிகவும் பொருந்துவதால் பிறக்கின்றன.

**90)** ______ வாயைத்திறந்து ஒலிக்கும் முயற்சியால் பிறக்கிறது.

A) உயிர் எழுத்து
B) ஆய்த எழுத்து
C) மெய் எழுத்து
D) உயிர்மெய் எழுத்து

**91)** ______ யாவும் தத்தம் முதலெழுத்துகள் தோன்றும் இடங்களிலேயே அவை பிறப்பதற்கு உரிய முயற்சிகளைக் கொண்டு தாமும் பிறக்கின்றன.

A) முதலெழுத்துக்கள்
B) சார்பெழுத்துக்கள்
C) இணையெழுத்துக்கள்
D) உயிரெழுத்துக்கள்

## புத்தகப் பின்பக்க வினாக்கள்

**92)** இதழ்களைக் குவிப்பதால் பிறக்கும் எழுத்துகள் _____

A) இ, ஈ B) உ, ஊ C) எ, ஏ D) அ, ஆ

**93)** ஆய்த எழுத்து பிறக்கும் இடம் ______.

A) மார்பு B) கழுத்து C) தலை D) மூக்கு

**94)** வல்லின எழுத்துகள் பிறக்கும் இடம் _____.

A) தலை B) மார்பு C) மூக்கு D) கழுத்து

**95)** நாவின் நுனி அண்ணத்தின் நுனியைப் பொருந்துவதால் பிறக்கும் எழுத்துகள்

A) க், ங் B) ச், ஞ் C) ட், ண் D) ப், ம்

**96)** கீழ்இதழும் மேல்வாய்ப்பல்லும் இணைவதால் பிறக்கும் எழுத்து _____.

A) ம் B) ப் C) ய் D) வ்

**88)C 89)D 90)B 91)B 92)B 93)C 94)B 95)C 96)D**

**97)** பொருத்துக.

1) க், ங் - அ) நாவின் இடை, அண்ணத்தின் இடை

2) ச், ஞ் - ஆ) நாவின் நுனி, மேல்வாய்ப்பல்லின் அடி

3) ட், ண் - இ) நாவின் முதல், அண்ணத்தின் அடி

4) த், ந் - ஈ) நாவின் நுனி, அண்ணத்தின் நுனி

A) 1-ஆ, 2-இ, 3-ஈ, 4-அ B) 1-ஆ, 2-அ, 3-ஈ, 4-இ

C) 1-ஈ, 2-இ, 3-ஆ, 4-அ D) 1-இ, 2-அ, 3-ஈ, 4-ஆ

**98)** பறவைகளின் ஒலிமரபுகளில் பொருந்தாதது எது?

A) புறா - குனுகும் B) மயில் - அகவும்

C) கூகை - குழறும் D) சேவல் - கொக்கரிக்கும்

- ஆந்தை - அலறும்
- கோழி - கொக்கரிக்கும்
- கிளி - பேசும்
- காகம் - கரையும்
- குயில் - கூவும்
- சேவல் - கூவும்
- மயில் - அகவும்

**தொகை மரபு:**

- மக்கள் கூட்டம்
- ஆநிரை
- ஆட்டு மந்தை

**வினை மரபு:**

- சோறு உண்
- முறுக்குத் தின்
- சுவர் எழுப்பு
- தண்ணீர் குடி
- பால் பருகு
- கூடை முடை
- பூக் கொய்
- இலை பறி
- பானை வனை

**கலைச்சொற்கள்**

- ஒலிபிறப்பியல் - Articulatory phonetics
- உயிரொலி - Vowel
- மெய்யொலி - Consonant
- அகராதியியல் - Lexicography
- மூக்கொலி - Nasal consonant sound
- ஒலியன் - Phoneme
- கல்வெட்டு - Epigraph
- சித்திர எழுத்து - Pictograph

****

All the Best

**97)D 98)D**

ETW ACADEMY